**வாக்குமூலம்**

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், சிவகங்கை**

**வழக்கு எண். SC.No.121 /2015**

**வழக்கு சாட்சி: PW.6**

**தேதி: 23.02.2023**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்:** | **ரவிச்சந்திரன்** | **ஜாதி:** | |
| **தந்தை பெயர் :** | **இராமநாதன்** | **தொழில்:** | **விவசாயம்** |
| **கிராமம்:** | **ஆவரங்காடு** | **சமயம்:** | **இந்து** |
| **தாலுகா:** | **மானாமதுரை** | **வயது:** | **46/23** |

**(எதிரிகள் 1முதல் 6 வரை ஆஜர்)**

**முதல் விசாரணை:**

எனக்கு சொந்த ஊர் ஆவரங்காடு ஆகும். நான் சிவகங்கையில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். 31-07-2012 அன்று நானும் எனது சின்ன மாமனார் டி.அதிகரையை சேர்ந்த இராமையா மகன் விஸ்வநாதனும் மதுரைக்கு சொந்த வேலையாக சென்றிருந்தோம். அன்று பகல் 12.30 மணியளவில் எனது மனைவி தீபா எனக்கு போன் செய்து எனது மாமியார் முத்துராமுவை மகாதேவன் குத்தி கொலை செய்துவிட்டதாக தகவல் சொன்னார். நானும் விஸ்வநாதனும் மதுரையில் இருந்து கிளம்பி சித்தலூருக்கு மதியம் சுமார் 2.00- 2.15 மணியளவில் வந்தோம். அங்கு சிவகங்கை தாலுகா காவல் ஆய்வாளர் மற்றும் இருந்தார்கள். சம்பந்தப்பட்ட வரைபடம் வரைந்தார்கள். பார்வை மகஜர் தயார் செய்தார்கள். அங்கிருந்த கம்பை கைப்பற்றி அத்தாட்சி தயார் செய்தார்கள். நான் தயார் செய்த பார்வை மகஜர் அசாஆ.2 ஆக குறியீடு செய்யபடுகிறது. என்னிடம் படித்து காட்டி சித்தலூரில் வைத்து ஆய்வாளர் 2 கையெழுத்து பெற்றார். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரிக்க நான் நடந்த விபரங்களை கூறினேன்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>

ஆவரங்காடு சிவகங்கை மாவட்டத்தில் திருப்பாச்சேத்தி அருகில் உள்ளது. சிங்கமுத்துவின் மகள் தீபாதான் என் மனைவி. என் மனைவியின் தாயார் இறந்து

போனதாகத்தான் இந்த வழக்கு. நான் காவல் துறையின் விசாரணையின் போது 31-07-2012ம் தேதி பகல் 12.30 மணிக்கு என் மனைவி எனக்கு போன் செய்து தகவல் சொன்னதாக கூறவில்லை என்றால் காவல்துறை அதிகாரிகள் கேட்கவில்லை நான் சொல்லவில்லை. மதுரைக்கு இரண்டு சக்கர வாகத்தில் சென்றிருந்தேன். நானும் என் சின்னமாமனார் விஸ்வநாதனும் ஒன்றாகத்தான் சென்றோம். அதே வண்டியில் தான் சம்பவ இடத்திற்கும் வந்தோம். சித்தலூரில் 500 வீடுகள் இருக்குமா என்றால் சித்தலூரில் 10 முதல் 20 வீடுகள் தான் இருக்கும். சித்தலூரில் எத்தனை தெருக்கள் இருக்கிறது என்று எனக்கு தெரியாது. நான் சென்ற தெரு கிழ-மேல் தெரு. அந்த சந்து 6 அல்லது 7 அடி அகலம் இருக்கும். நான் செல்லும் பொழுது போலீசார் இருந்தார்கள் வேறு யாரும் வரவில்லை. நான் அங்கு செல்லும் போது நான் கேள்விப்பட்ட சமயத்தில் இருந்து 2 மணி நேரம் இருக்கும். நான் அந்த இரண்டு மணிநேரமாக வேறு யாரும் வந்தார்களா என்று விசாரித்த போது போலீசார் தவிர அங்கு வேறு யாருமில்லை. நான் பார்க்கும் போது அங்கிருந்த அனைவரும் சிவகங்கைக்கு சென்றுவிட்டதாக சொன்னார்கள். நான் பார்த்த போது பூஜைக்காக கொண்டு வந்த சாமான்கள் எல்லாம் டாடா சுமோ வண்டியில் இருந்தது. அந்த டாடா சுமோ என்னுடைய மாமனார் வண்டி. அந்த வண்டி நான் அங்கு வரும் போது இல்லை. நான் பார்க்கும் பொழுது பொங்கல் சாமான்கள் எல்லாம் பாதி வீட்டிலும், பாதி வண்டியிலும் இருந்தது. நான் பார்த்த விஷயங்களை காவல்துறை அதிகாரிகள் பார்த்தார்களா என்று நான் கவனிக்கவில்லை. இறந்து போனார்கள் என்ற பதட்டத்தில் அங்கிருந்த பொருட்களை ஏன் எழுதவில்லை என்று நான் காவல் துறை அதிகாரியிடம் கேட்கவில்லை. நான் இறந்து போன முத்துராமுவின் மருமகன் என்பதால் என் மாமனார் சிங்கமுத்து சொல்லிக் கொடுத்து பார்க்காத விஷயங்களை

பார்த்ததாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் 31-07-2012ம் தேதியன்று நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும் உறவினர் என்பதால் சாட்சியாக போட்டுள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்வது போல் பார்வை மகஜர் சொன்ன இடத்தில் தயார் செய்யப்படவில்லை என்று சொன்னால் அது சரியல்ல.

குறுக்கு விசாரணை: முடிவுற்றது.